[1973 நவம்பர் 21

கும்முடிப்பூண்டியில் சிறுதொழில் பயிற்சி

*281 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டியில் பல்வேறு சிறு தொழில்களைக் கற்பிக்க நடமாடும் பேருந்து தொழிற் பயிற்சி நிலையம் (Mobile Van Unit) அமைப்பதில் மேலும் காலதாமதப்படுவதற்கான காரணங்கள் யாவை ?

(இ) இது எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) கும்மிடிப்பூண்டி பஞ்சாயத்து ஒன்றிய ஆணையரின் வேண்டுகோளுக்கு இணங்க இந்திய அரசுக்குச் சொந்தமான சிறுதொழில் பணி நிலையத்தினரால், சிறு தொழில்களை செயல்முறைப்படுத்தியும் கைவினைஞர்களுக்கு பயிற்சியும் அளிக்கும், இரு நடமாடும் தொழிற் பயிற்சிப் பேருந்துகள் 15—4—1973 அன்று கும்மிடிப்பூண்டி ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு, அப்பயிற்சி 15—5—1973 வரை கொடுக்கப்பட்டுள்ளது.

(இ) வினு எழாது.

திரு. கா. வேழவேந்தன் : அந்தப் பயிற்சி பயனுள்ளதாக இருக்கிற காரணத்தினுல் முறைப்படி அந்த 'வான்' மீண்டும் அப்பகுதிக்குச் செல்லுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இம்மாதிரி நடமாடும் பயிற்சி நிலையங்களை பின்தங்கிய பகுதியிலுள்ள கிராமங்களுக்கு அனுப்பவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் நோக்கம். அனுப்பப்பட்ட பகுதிக்கு அனுப்புவதாக இப்பொழுது இல்லை.

ஒன்றியங்களில் தொழில் விரிவாக்க அதிகாரிகள்

*282 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு தொழில் விரிவாக்க அதிகாரி [Extension Officer (Industries)] நியமிப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.